ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**உதவிப் பாதுகாப்பு அலுவலர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்வதற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளுடன் கூடிய முப்படைகளில் அல்லது இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையில் நிரந்தர சேவையில் பணியாற்றியுள்ள தகைமைபெற்ற அத்துடன் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கி விண்ணப்பங்களைக் கோருகின்றது.**

# உதவிப் பாதுகாப்பு அலுவலர் பதவி

## (ஒப்பந்த அடிப்படை)

### 1.0 பணி/ பொறுப்புக்கள்:

- இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களும் அவர்களது கடமைகளை சிறந்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்கான பாதுகாப்பான சூழலை உறுதிசெய்தல்.
- சாத்தியமான வெளிவாரி அச்சுறுத்தல்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியின் ஆதனங்களைப் பாதுகாத்தல்.

### 2.0 குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்:

**2.1 கல்வித் தகைமைகள்**

க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தபட்சம் 6 சித்திகள்

**2.2 உடலியல் தேவைப்பாடுகள்**

உயரம் (i) ஆண் : 167.5 செ.மீ (5′ 6″) அல்லது அதற்குமேல்

(ii) பெண் : 162.5 செ.மீ (5′ 4″) அல்லது அதற்குமேல்

நிறை (i) ஆண் : 17 < உடல் திணிவுச் சுட்டி < 26

(ii) பெண் : 17 < உடல் திணிவுச் சுட்டி < 25

மார்பளவு (i) ஆண் : 32″ (குறைந்தபட்சம்)

**2.3 வயது**

ஆண் : 2023.11.15 அன்று 40 வருடங்களுக்குக் குறையாமலும் 50 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்

பெண் : 2023.11.15 அன்று 35 வருடங்களுக்குக் குறையாமலும் 50 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல்

**2.4 அனுபவம்**

- முப்படைகளில் அல்லது இலங்கைப் பொலிஸ் - விசேட அதிரடிப்படை நிரந்தர சேவையில் கறைபடியாத மற்றும் தொடர்ச்சியான சேவையுடன் குறைந்தபட்சம் ஆண்கள் 22 வருடங்கள், பெண்கள் 15 வருடங்கள் கொண்ட அனுபவம்.
- விசேட படையணி, வெடிபொருள், பதவிநிலைப் பொறுப்பாளர், ஆயுதம் அல்லது உடற்பயிற்சிப் போதனாசிரியர், தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் விசேடத்துவம் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

**2.5 முப்படைகளில்/இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் வகித்த பதவிநிலை**

இலங்கை தரைப்படையில் சார்ஜன், இலங்கை கடற்படையில் கட்டளை அதிகாரி, இலங்கை வான்படையில் சார்ஜன் அல்லது இலங்கை பொலிஸ் - விசேட அதிரடிப்படையில் சார்ஜன் வகுப்பு I பதவிநிலையில் அல்லது அதற்கு மேல் ஓய்வுபெற்ற அலுவலர்கள்.

**விண்ணப்பத்துடன் சேர்த்து கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு கண்டிப்பாக ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேற்குறித்த ஆவணங்களின் பிரதிகளின்றி சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்புச் செயன்முறையில் எந்தவொரு கட்டத்திலும் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

### 3.0 தொழில்:

மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில். ஒப்பந்தங்கள் தொடக்கத்தில் ஒரு (01) ஆண்டுக்காக கைச்சாத்திடப்பட்டு வங்கியின் தேவைப்பாடுகள் மற்றும் தனிப்பட்ட செயலாற்றம் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அது மீளப்புதுப்பிக்கப்படும்.

### 4.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

மாதமொன்றுக்கு அனைத்தும் உள்ளடங்கலாக வரி விதிக்கத்தக்க நிலையான கொடுப்பனவு ரூ.100,000/= அத்துடன் சம்பளத்தின் 12 சதவீதம் மற்றும் 3 சதவீதத்திற்குச் சமமான தொகை முறையே ஊழியர் சேமலாப நிதியத்தின் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புக்களாக இலங்கை மத்திய வங்கியினால் பங்களிப்புச் செய்யப்படும்.

### தெரிவுசெய்யப்படும் முறை

எழுத்து மூலப் பரீட்சையின் பின்னர் செயன்முறைப் பரீட்சை மற்றும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் பொருத்தமான அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

### விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களைச் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் **https://www.cbsl.gov.lk/en/careers**

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2023.11.15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவிப் பாதுகாப்பு அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் (ஒப்பந்த அடிப்படை)" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டர்.

வேண்டப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் இப்பதவிக்கு நியமிப்பதற்குக் கருத்திற்கொள்ளப்படமாட்டர்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்.

ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/ இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.


**பணிப்பாளர் - மனிதவளங்கள்**

**இலங்கை மத்திய வங்கி, இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**

**தொலைபேசி : 011-2477330 தொலைநகல் : 011-2477715**